இந்த மாத
சினேகிதி
ஆசிரியர்: மஞ்சுளாரமேஷ்

1.2.2015

## மாத்ரு தேவோ பவ!



# வாரா வாரா, இனிய கத்துக்கோ!

## ‘கிருஷ்ணா ஸ்வீட்ஸ்’ முரளி

பேட்டி : கீதா மோகன்

“அம்மா...” - கேட்கும்போதே சிலிர்ப்பை ஏற்படுத்தும் வார்த்தை. இந்தச் சொல்லுக்கு உரியவருக்கு ஈடு இணை இந்த உலகத்தில் வேறு எவரும் இல்லையே! அதனால்தான். “மாதா...” என்பதை முதலில் வைத்தார்கள்.

வாழ்வில் உச்சத்தைத் தொட்டவர்களுள் பெரும்பாலோர் தங்களது வெற்றிக்கு தங்களது தாயின் வளர்ப்பு முறை, அணுகுமுறையைக் காரணங்களாகச் சொல்வதுண்டு. ஒரு சிலர் மற்றவர்களிடம் அவற்றை நேரம் கிடைக்கும்போதெல்லாம் மன நிறைவோடு நினைவுகூர்ந்து சிலாகித்துப் பேசுவதும் உண்டு. அம்மாதிரி பேசுவது இன்றைய இளையதலைமுறையினருக்கு முன்னுதாரணமாய் இருக்க வேண்டும் என்பதற்காகவும் தங்களது தாய்க்குச் செய்யும் கடமையாகவும் மற்றும் தொண்டாகவும் அவர்கள் கருதுகிறார்கள். அவ்வகையில் பிரபல ‘கிருஷ்ணா ஸ்வீட்ஸ்’ முரளி தனது தாயுடனான அனுபவங்களை மெய்சிலிர்ப்புடன் நம்மிடையே பகிர்ந்து கொள்கிறார்...

“ஆம்; நூறு சதவிகிதம் உண்மை. என் அம்மாவைப் பற்றிப் பேசுவதென்றால் நான் அதிகமாகவே உணர்ச்சி வசப்பட்டு விடுவேன். ஏனென்றால் நான் அம்மா பிள்ளை. அது மட்டுமல்ல, கடைக்குட்டி என்பதால் அவளுக்குச் செல்லப்பிள்ளையும்கூட”என்று ஆரம்பித்துத்தொடர்ந்தார்...

**என் அம்மாவின் அழகு... வாசம்... பாங்கு...**

“எல்லோருக்குமே அவங்கம்மா அழகு தான். அதிலும் எங்க அம்மா ரொம்ப அழகாய் இருப்பாள். அம்மாவின் முகம் முதன்முதலாக என் மனதில் பதிந்த

